**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 103 **நாள்**: 16.02.2026

# மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் “உலகம் உங்கள் கையில்” எனும் மாபெரும் திட்டத்தின் கீழ், வளசரவாக்கம் மண்டலத்திற்குட்பட்ட 25 கல்லூரிகளைச் சார்ந்த 1,698 மாணவர்களுக்கு மடிக்கணினிகளை இன்று வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், வளசரவாக்கம் மண்டலம், லேமச் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இன்று (16.02.2026) நடைபெற்ற "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின் கீழ், வளசரவாக்கம் மண்டலத்திற்குட்பட்ட 25 கல்லூரிகளைச் சார்ந்த 1,698 மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 05.01.2026 அன்று சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் உயர்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக “உலகம் உங்கள் கையில்” என்னும் மாபெரும் திட்டத்தில் 20 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் முதற்கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகளை கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

அவ்வாறாக, தமிழகம் முழுவதும் உயர்கல்வி பயிலும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று, செண்பக நர்சிங் கல்லூரி, ஆல்பா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், இராமாபுரம்-பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவு, மார் கிரிகோரியாஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஸ்ரீராமச்சந்திரா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, ஸ்ரீராமச்சந்திரா இணை சுகாதார அறிவியல் பிரிவு, ஸ்ரீராமச்சந்திரா செவிலியர் கல்லூரி, ஸ்ரீராமச்சந்திரா மருந்தியல் துறைகள், ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் உள்ளிட்ட 25 கல்லூரிகளைச் சார்ந்த 1,698 கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சமூகநீதி கண்காணிப்புக் குழுவின் தலைவர் பேராசிரியர் திரு.சுப.வீரபாண்டியன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் திரு.கா.கணபதி, தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், மண்டலக்குழுத் தலைவர் திரு.நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.க. ஹேமலதா, திருமதி ச. பாரதி, திருமதி ர. செல்வி ரமேஷ், திருமதி. சாந்தி ராமலிங்கம், திரு.க. ராஜு , திருமதி ஆ. மாலினி, திரு. ஏ. ஸ்டாலின், திருமதி மா. ரமணி மாதவன், கல்லூரி நிர்வாகிகள், பேராசிரியர்கள், மாணவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**